செ.வெ.எண்:76 நாள்:30.07.2019

# பத்திரிக்கைச் செய்தி

பாசன நீரை சேமிக்க உதவும் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் நுண்ணீர் பாசனத் திட்டம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழக அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே சிறு/குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும் இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் வழங்கப்படுகிறது. விவசாயிகள் செலுத்த வேண்டிய நுண்ணீர் பாசன அமைப்புகளுக்கான சரக்கு மற்றும் சேவைவரியை தமிழக அரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில், இத்திட்டம் நடப்பு நிதியாண்டில் 2019-20 வேளாண்மை துறை மூலம் 1500 எக்டருக்கு ரூ.649.78 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் கரும்பு பயிருக்கு சிறு/குறு விவசாயிகளுக்கு ரூ.97,134/- மற்றும் இதர விவசாயிகளுக்கு ரூ.75,452/- வழங்கப்படுகிறது. மேலும், தென்னை பயிருக்கு சிறு/குறு விவசாயிகளுக்கு ரூ.27,770/- மற்றும் இதர விவசாயிகளுக்கு ரூ.21,572/- வழங்கப்படுகிறது.

மழைத்தூவான் அமைக்க சிறு/குறு விவசாயிகளுக்கு ரூ.36176/- மற்றும் இதர விவசாயிகளுக்கு ரூ.28101/- வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் ஆதார் அட்டை, அடங்கல், கணிணி சிட்டா, நில வரைபடம், சிறு/குறு விவசாயிகளாக இருப்பின் வட்டாட்சியரிடம் இருந்து பெறப்பட்ட சான்று ஆகிய ஆவணங்களுடன் தாங்களாகவே www.tnhorticulture.tn.gov.in/horti/mimis என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம் அல்லது வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பதிவு செய்து இத்திட்டத்தில் பயன்பெற தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள வட்டார வேளாண்மைத் துறை அலுவலகங்களை தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர், திரு.த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.